**46. அரதத்தர் கதை**

சோழ நாட்டிலே கஞ்சனூரிலே முன்னாளில் அரதத்தர் என்னும்பெயருடையார் ஒருவர் வாழ்ந்திருந்தார். இவரு டைய தாய் தந்தையர் வைணவராக இருந்தும் இவர் சைவராகஇருந்தார். நூல்களை நன்கு கற்றுச் சிறந்த அறிவு



பெற்றிருந்தார். அறிவுக்கு அழகு உயிர்களிடத்திலே அருள்செலுத்தலாம். இவர் பிற உயிர்களிடத்தில் மிகுந்த அருளுடையவராக இருந்தார். இவருடைய தாயார் பக்கத்துவீட்டில் சிறிது நெல்லைக் கடன் வாங்கி அதனை வெளியிற் காயவைத்து அதற்கு இவரைக் காவலாக வைத்தார். மாடு ஒன்று வந்து நெல்லைத் தின்றது. இவர் அதனை விரட்டாமல் பார்த்துக் கொண்டி ருந்தார். ஒரு நாள்சிவவழிபாடு செய்து கொண்டிருக்கும் போது நாய் ஒன்று புகுந்து பூசைக்கு வைத்திருந்த நீரைக் குடித்தது. அதனையும் இவர் விரட்டவில்லை. ஒரு நாள் அந்தணரோடு பந்தியில் இருந்து உண்ணத் தொடங்கினார். அப்பொழுது தொழு நோயுடைய புலையன் ஒருவன் வந்தான். அவன் மிகுந்த பசியாக இருக்கிற தென்றுபகர்ந்தான். இவர் தம்முடைய உணவை அவனுக் கிடுமாறு பணித்தார். பிற அந்தணர்கள் இவருடைய செயலைப்பழித்ததுடன் அப்புலையனை விரட்டத் தொடங்கினார்கள். அரதத்தருடைய அருள் அனைவராலும் போற்றப் பட்டது.அரதத்தர்பல நூல்கள் செய்துள்ளார். கண்ணுடைய வர்களாகவிருந்தும் அருளற்றவர்களாக இருப்பவர்கள் மண் ணோடு பொருந்திய மரத்தைப் போன்றவர்களாவர் என் பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக இவர்அமைந்தார்.

[ அருளுடைமை]

(அரதத்தர் வரலாறு)